செய்தி வெளியீடு எண்:768 நாள்:23.09.2021

**சட்டமன்றப் பேரவைச் செயலகம்**

**செய்திக் குறிப்பு**

திரு. கே.பி. முனுசாமி மற்றும் திரு. ஆர். வைத்திலிங்கம் ஆகியோர் பதவி விலகியதையடுத்து ஏற்பட்ட வெற்றிடங்களுக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை வாக்காளர்களாகக் கொண்டு மாநிலங்களவைக்கு இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க செப்டம்பர்–அக்டோபர், 2021–இல் தனித்தனியாக நடைபெறும் இடைத்தேர்தல்களுக்கு வரப்பெற்ற வேட்பு மனுக்கள் இன்று (23.09.2021) முற்பகல் 11.00 மணிக்கு கூர்ந்தாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

திரு. கே.பி. முனுசாமி அவர்களின் வெற்றிடத்தை நிரப்ப பெறப்பட்ட வேட்பு மனுக்களின் ஆய்வுக்குப் பின், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த **டாக்டர் கனிமொழி என்விஎன் சோமு** அவர்களது வேட்பு மனு செல்லத்தக்கது என அறிவிக்கப்பட்டது.

இத்தேர்தலில், கீழ்க்கண்ட 3 சுயேட்சை வேட்பாளர்களால் அளிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன:

1. திரு. ந. அக்னி ஸ்ரீராமசந்திரன்
2. டாக்டர் கு. பத்மராஜன்
3. திரு. சா. புஷ்பராஜ்

திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்களின் வெற்றிடத்தை நிரப்ப பெறப்பட்ட வேட்பு மனுக்களின் ஆய்வுக்குப் பின், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த **திரு. கே.ஆர்.என். ராஜேஷ்குமார்** அவர்களது வேட்பு மனு செல்லத்தக்கது என அறிவிக்கப்பட்டது. சுயேட்சை வேட்பாளரான திரு. ந. அக்னி ஸ்ரீராமசந்திரன் அவர்களது வேட்பு மனு நிராகரிக்கப்பட்டது.

இடம் : சென்னை – 600 009.
நாள் : 23.09.2021.

**(கி. சீனிவாசன்)**
தேர்தல் நடத்தும் அதிகாரி
மற்றும் செயலாளர்
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9